பொது நிருவாகச் சுற்றறிக்கை : 22/2024

எனது இல : EST-01/MISCL/06/0032(II)
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2024.12.30

அமைச்சுச் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைத் தலைவர்கள் அனைவருக்கும்

**“கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka)”தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் வருடத்தில் கடமைகளை ஆரம்பித்தல்**

முன்மாதிரியாக செயற்படல், ஊக்கமளித்தல், ஈடுபடுத்தல் மற்றும் மாற்றமுறும் தேவைகளைப் பலமுள்ளதாக உறுதிப்படுத்துவதினூடாக சமூகமொன்றின் நடத்தைமுறையிலான மாற்றங்களை ஏற்படுத்தும் பலமான அணுகுமுறையொன்றை அடையக்கூடியதாக இருக்கும். இதன் மூலம் ஒரு நாட்டின் சமூக, பொருளாதார கலாசார நெறிமுறையிலான மற்றும் சுற்றாடல் ரீதியாக முன்னோக்கிச் செல்லும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதற்காக நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களும் அரச ஊழியர்களும் நாட்டு மக்களும் ஒன்றாக ஒன்றிணைந்து ஒரே நோக்கத்துடன் ஒரே திசையை நோக்கிச் செயற்படுதல் வேண்டும். தேசிய மட்டத்தில் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை புதிய அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது.

02. ஒரு நாடு அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் போது, நாட்டின் அனைத்து மக்களும் இன, மத, சாதி, பிரதேச அரசியல் வேறுபாடுகளைத் துறந்து ஒரே தேசமாக செயலாற்றுதல் வேண்டும். நீண்ட காலமாக மக்களின் பிரார்த்தனையாக விளங்கிய தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான பலமான சந்தர்ப்பம் தற்போது நாட்டில் உருவாகியுள்ளது. இந்நிலை உறுதிசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், மீண்டும் நாட்டில் இனவாதமோ அல்லது தீவிரவாதமோ தலை தூக்காமல் வலுவான சமூகக் கட்டமைப்பொன்றை நிர்மாணித்துக் கொள்ளும் பொறுப்பு நாடு என்ற வகையில் எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

03. அரச ஊழியர்கள் என்ற வகையில் நாங்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில்: பொது மக்களிடத்தில் அரச சேவை தொடர்பில் நல்லெண்ணமொன்று காணப்படுவதில்லை என்பதாகும். இந்நாட்டின் அரச சேவை மூலம் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறா விட்டால் அல்லது அவர்கள் திருப்திகொள்ளாவிட்டால், அது பற்றி ஆழமாகச் சிந்தித்து செயலாற்றி அரச சேவையை மீண்டும் மறுசீரமைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதற்காகப் புதிய அரசாங்கத்தினால் பல்வேறு யோசனைகள் முன்வைக்கபட்டிருப்பதுடன், அவற்றை நடைமுறைப்படுத்தி அரச சேவை மீது மக்களுக்குள்ள நம்பிக்கையை மீண்டும் வென்றெடுக்கும் பெறுப்பும் அரச சேவையையே சாரும் ஒவ்வொரு நாட்டினதும் அபிவிருத்தியில் பலமான அரச சேவை பங்களிப்புச் செய்வதுடன், அபிவிருத்தி நோக்கங்களை வெற்றிகரமாக அடையப்பெற்ற ஒவ்வொரு நாடும் அந்த அபிவிருத்தியில் அரச சேவையின் மூலம் பாரிய பங்களிப்பைப் பெற்றுக் கொண்டுள்ளன. இந்நாட்டின் அரச சேவையும் இம் முன்னுதாரணத்தின் ஊடாகப் பயணித்து புதியதொரு அணுகுமுறை ஒன்றின் ஊடாகச் செயற்பட வேண்டிய சவால் மிகுந்த காலகட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

04. ஒட்டுமொத்த அரச சேவையும் மக்களை மையமாகக் கொண்ட அரச சேவை ஒன்றிற்காக மீள் திசையை நோக்கிப் பயணிப்பதற்கு எல்லா அரச ஊழியர்களும் திடசங்கற்பம் பூணுதல் வேண்டும். கொள்கை வகுப்பின் போதும், நடைமுறைப்படுத்தும் போதும், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதும், பொது மக்களுக்கான சேவைகளை வழங்கும் போதும், பிரசைகள் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நடைமுறைகளை வகுத்தல் வேண்டும். டிஜிட்டல் மயமாக்களை கருவி ஒன்றாகப் பயன்படுத்தி முடியுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் அரச சேவையின் வினைத்திறன், பண்பு, பிழையற்ற தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை என்பன மேலோங்கும் வகையில் செயற்பட்டு, பிறக்கின்ற 2025 ஆம் வருடத்தை நேர்மறை மாற்றம் ஒன்றின் அடித்தளமாகக் கொள்ளல் வேண்டும்.

05. அதே போன்று எமது சமூகம் பொதுவாக முகம்கொடுத்து வருகின்ற பல்வேறு நெருக்கடிகள் மீதும் இச்சந்தர்ப்பத்தில் அரச சேவையின் கவனம் ஈர்க்கப்படுதல் வேண்டும். உரிய தரத்தைக் கொண்டிராத உணவுகள் மற்றும் முறையற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் காரணமாகப் பாரியளவில் தொற்றா நோய்கள் பரவி வருகின்றன. உணவு வர்த்தகம் போன்ற துறைகளில் நுகர்வுக்குப் பொருத்தமற்ற பயன்பாட்டுப் பொருட்களை (உள்ளீடுகளை) பயன்படுத்துவதும் அதே போன்று தரமற்ற உணவு விநியோகங்களும் இடம் பெறுகின்றன. டெங்கு முதலான தொற்று நோய்கள் பரவுதல் மற்றும் அவற்றை ஒழித்தல் சிரமம் என்பவற்றிற்குக் காரணமாக மனித செயற்பாடுகளும் நடத்தைகளும் காரணமாக அமைந்துள்ளன. சிறந்த பழக்க வழக்கமுள்ள பெருமைக்குரிய வரலாற்றிற்கு உரிமை கோருகின்ற எமது நாட்டின், சுற்றுலாக் கைத்தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் போன்ற துறைகளில் இதற்கு முற்றிலும் மாறுபட்ட செயற்பாடுகள் சம்பந்தமாகத் தகவல்கள் அறியக்கிடைக்கின்றன. பொது வசதிகளை வழங்கும் போதும் பராமரிப்புப் பணிகளின் போதும். எதிர்பார்க்கப்பட்ட தரங்களற்றதாகக் காணப்படுகின்றன. அரச மற்றும் தனியார் துறை கட்டிடங்களை நிர்மாணிக்கும் போதும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற சேவை

வழங்கல்களின் போதும் மாற்றுத் திறனாளிகளான குடிமக்கள் கவனிப்பாரற்ற சமுதாயமாக விளங்குகின்றனர்.

06. ஒரு சமூகம் என்ற வகையில் நாம் ஒருமைப்பாட்டை அவ்வளவாக மதிக்காத ஓர் இனமாக இருப்பதில் சமூகத்திற் பொறுப்புக்கூறல் செயற்பாட்டின் போது அனைத்து தரப்புக்களினதும் பதில் நடவடிக்கயானது அசமந்த போக்கினையே காட்டுகின்றது. இந்த நிலைமையானது சமூகத்தினுள் சிறந்த மானிட உறவுளைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக அமைந்துள்ளது.

07. தற்காலத்தில் நாட்டில் நிறுவப்படும் பொது மற்றும் தனியார் கட்டுமானங்கள் உரிய தரத்தில் காணப்படாமை முதன்மையான குறைப்பாடொன்றாக அடையாளம் காணலாம். நாட்டில் பொதுச்சொத்துக்ளை கட்டியெழுப்புதல், அவற்றை பராமரித்தல் தொடர்பிலான சட்டரீதியான கட்மைப்புகள் காணப்படினும், முறையற்ற அபிவிருத்தி செயற்பாடுகளினூடாக குறித்த சட்ட விதிமுறைகள் மீறப்பட்டு தரமற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போக்குவரத்து, துப்பரவேற்பாடு, வீடமைப்பு மற்றும் நிர்மாணங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் போன்றே கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற கட்டமைப்புகளிலும் இந்த தரக் குறைபாடுகளை அவதானிக்கலாம். இச்செயற்பாடுகளின் இறுதிப் பொறுப்பு அரச துறையின் மீது சுமத்தலும் அரச சேவையின் கவனத்திற்கு கொண்டுவரப்படுதலும் வேண்டும்.

08. இந்த அனைத்து விடயங்களும் அடங்கலாக நாட்டினுள் நெறிமுறையிலான, சுற்றாடல் மற்றும் சமூக மாற்றமொன்றை ஏற்படுத்தி நாட்டின் தரப்படுத்தல் நோக்கங்களை முதன்மையாக் கொண்டு அரசாங்கத்தினால் Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளதுடன் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடங்கி வைக்கும் நிகழ்வு 2025.01.01 ஆம் திகதி சனாதிபதி அவர்களால், சனாதிபதி செயலகத்தில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தை வழிநடாத்துவதற்கு நாட்டின் அனைத்து தரப்புகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினைக்கொண்டமைந்த சனாதிபதி செயலணியொன்று தாபிக்கப்பட்டு வர்த்தமானி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

09. அதன்படி தொடங்கவிருக்கும் 2025 ஆம் ஆண்டின் கடமைகளை ஆரம்பிக்கும் சனவரி மாதம் 01ஆம் திகத புதன்கிழமை Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்துவைத்தல் அரச துறை மற்றும் தனியார் துறை ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கு Clean Sri Lanka சனாதிபதி செயலணி சனாதிபதி செயலகத்துடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்துள்ளது. அதன்போது, அனைத்து அரசதுறை நிறுவனங்களின் தலைவர்கள், ஒட்டுமொத்த அரச சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் ஒத்துழைப்புடன், சனாதிபதி செயலகத்தில் நடைபெறும் செயற்பாடுகளிற்கு இணையாக தமது சேவை நிலையங்களில் கடைமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ வைபவத்தை நடாத்துதல் வேண்டும். பொது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில், பொதுமக்களுக்கு வினைத்திறனுடனும் பயனுள்ளதுமான அரச சேவையினை வழங்குவதற்காக ஒட்டுமொத்த அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களும் திடசங்கற்பத்துடன்

அர்ப்பணிக்க வேண்டியுள்ளதால், அதற்கு இணையாக அன்றைய தினம், அதேநேரத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளைத் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

I. <u>மு.ப 8.30 மணிக்கு</u>; அமைச்சுச் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தல்.

II. தேசிய கீதம் பாடுதல்.

III. நாட்டுக்காக உயிர் நீத்த அனைவரையும் நினைவுகூரும் முகமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துதல்

IV. <u>மு.ப 9.00 மணிக்கு;</u> சனாதிபதி செயலகத்திலிருந்து அனைத்து வெகுசன ஊடகங்கள் ஊடாக ஒளி / ஒலி பரப்பப்படும் Clean Sri Lanka நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் தேசிய விழாவுடன் தொடர்புகொள்ளல்.

10. சனாதிபதி செயலகத்தில் நடைபெறும் Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய விழவை அனைத்து அரச மற்றும் தனியார்துறை இலத்திரனியல் அலைவரிசைகள் மூலம் நேரடியாக ஒளி / ஒலி பரப்பப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள், அரசுடைமை கம்பனிகளின் தலைவர்கள் குறித்த நிகழ்ச்சிதிட்டத்தை நேரடியாகத் தமது பதவியணி பார்வையிடுவதற்கான வசதிகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன், இணைப்பு 1 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள Clean Sri Lanka சத்தியப்பிரமாணம் / உறுதியுரையைச் செய்வதற்காக நேரடியாகத் தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

11. இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக தலைமை தாங்கிச் செயற்படுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோக்க பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இல. - 011-2662340

தொலைநகல் - 011-2692158

மின்னஞ்சல் - ade-i@pubad.gov.lk

பிரதிகள் - 1. கௌரவ மகாண ஆளுநர்கள் – தயவுடன் தகவலுக்காக

2. சனாதிபதி செயலாளர் – உரிய நடவடிக்கைக்காக

3. பிரதமர் செயலாளர் – உரிய நடவடிக்கைக்காக

4. அமைச்சரவைச் செயலாளர் – உரிய நடவடிக்கைக்காக

5. கணக்காய்வாளர் தலைமையதிபதி – உரிய நடவடிக்கைக்காக

இணைப்பு 1

# **Clean Sri Lanka பிரசைகளை சத்தியப் பிரமாணம்/ உறுதிமொழி**

நாட்டு மக்கள் அனைவரினதும் உள்ளங்கள் புதிய எதிர்பார்ப்புகளுடன் நிரம்பியுள்ள வேளையில், நாம் 2025 ஆம் வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

நாடு என்ற ரீதியில் நாங்கள் தவறவிட்ட சகவாழ்வு, சமூக, பொருளாதார அபிவிருத்தி, நவீனத்துவம் மற்றும் கலாசார வாழ்வு என்பவற்றை மீண்டும் அடைவதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

எமது நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம்.

"***க்ளீன் ஸ்ரீ லங்கா***" என்பது வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்கு அத்தியவசியமான, கூட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றும், அத்துடன் பொறுப்புக்கூறும் தொழிற்பாடாகும். இன, மத அல்லது அரசியல் பேதமின்றி இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு உறுதிமொழி அளிக்கின்றோம்.

சகல நடவடிக்கைகளிலும், அனைத்து பிரசைகள் உயர் சமூக அந்தஸ்தை அடைவதற்கு உறுதுணையாக அமைகின்ற, ஒற்றுமை, பொறுப்புக்கூறல், சிக்கனம், வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகிய விடயங்களை முன்னுதாரணமாக கடைப்பிடிப்பதற்கும், அத்தர நியமங்களை பாதுகாத்த வண்ணம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அபிமானம் கொண்ட இலங்கைப் பிரசைகள் என்ற வகையில் அழகானதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், வளமான வாழ்க்கையை அடைவதற்கும், நேர்மையுடனும் ஒரே நோக்கத்துடனும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என்பதாக சத்தியப் பிரமாணம் செய்கின்றோம்./ உறுதிமொழிகின்றோம்.